International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

**தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)**

Volume: 04 Issue: 01 January to March 2022 www.irjtsjournal.org

# அர்த்தசாஸ்திரத்தில் வெளிப்படுத்தப்படும் நீதிச் சிந்தனைகள் - ஒரு மெய்யியல் நோக்கு

மாரிமுத்து பிரகாஷன்

*தத்துவவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்*
*தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை*
*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை*

***ஆய்வுச் சுருக்கம்***

*சந்திரகுப்த மௌரியனால் கட்டமைக்கப்பட்ட மௌரியப் பேரரசின் முதலமைச்சராக செயற்பட்ட கௌடில்யரினால் எழுதப்பட்ட அர்த்தசாஸ்திரம் புராதன இந்திய சமூகத்தினை வழிநடாத்துவதற்கான சட்ட ஒழுங்கு மற்றும் நீதி பற்றிய சிந்தனைகளை முன்வைத்துள்ள நூல்களில்; முதன்மையான ஒனறாகும். கி.பி நான்காம் நூற்றாண்டுக் காலப்பகுதிக்குரிய இது சிறிய இனக்குழு வாழ்க்கையில் இருந்து பாரிய சாம்ராஜ்ஜியமாக மக்களது சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கை விரிவடைந்து வந்த நிலையில் ஆட்சியாளன் எவ்வாறு தன்னுடைய தேசத்தில் ஒழுங்கினை அந்நிய படையெடுப்புக்களையும், உள்நாட்டுச் சதிகளையும் எதிர்கொண்டு பேண வேண்டும் என்பதற்கான வழிகாட்டலாக அமைந்துள்ளது. நூற்றி ஐம்பது அத்தியாயங்களில்; நாட்டின் பொருளாதார கொள்கைகள், நீதி நிர்வாகம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிர்வாக கொள்கைகள் என்று மூன்று பிரதானமான விடயங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கொள்கையாக அல்லாமல் அரசனது தலைமையில் மக்களது நலனை இலக்காகக் கொண்டு நடாத்தப்படும் அரசாட்சியின் ஒவ்வொரு அம்சத்திலும் ஆட்சியாளனை நெறிப்படுத்துகின்ற வழிகாட்டியாகவே அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும். அரசியல் யதார்த்தவாதத்தின் (Pழடவைiஉயட சுநயடளைஅ) அடிப்படையில் ஏகாதிபத்திய அரசினை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு வெளிப்படுத்தப்பட்ட முதலாவது சிந்தனையாக அமையும் இந் நூலின் மூன்றாம், நான்காம் அத்தியாயங்களில் தேசத்தின் சட்ட ஒழுங்கு, நீதி நிர்வாகம் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்பு சார்ந்ததாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வில் குறித்த விடயங்கள் நுணுகி மெய்யியல் ரீதியான பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

திறவுச் சொற்கள்: *கௌடில்யர், அர்த்தசாஸ்திரம், நீதி*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR

## ஆய்வு அறிமுகம்

விஸ்ணுகுப்தர், சாணக்கியர் என்ற மறுபெயர்களினாலும் அறியப்படுகின்ற கௌடில்யர் கி.பி நான்காம் நூற்றாண்டில் இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட மௌரிய பேரரசின் உருவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டதுடன் அதன் பேரரசனான சந்திரகுப்த மௌரியருடைய ஆசிரியராகவும், அரசவை ஆலோசகராகவும், முதலமைச்சராகவும் செயற்பட்டவராவார். சாம்ராஜ்ஜியம் ஒன்றினை உருவாக்கிய நடைமுறை அனுபவத்துடன் அதன்பொருட்டு பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகளை உள்ளடக்கி இவரினால் எழுதப்பட்ட நூலே அர்த்தசாஸ்திரமாகும். 1905ஆம் ஆண்டு சாமாசாஸ்திரி என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்மையினைத் தொடர்ந்து அரசியல், அரசியல் மெய்யியல் துறைகளில் மிகவும் கவனத்துக்குரிய ஒன்றாக இந்நூல் மாறியுள்ளது. பதினைந்து பாகங்களாக எழுதப்பட்டுள்ள இந் நூலில் ஆட்சியாளனை மையமாகக் கொண்டு குடிமக்களது நலனை இலக்காகக்கொண்டு ஒரு பேரரசு கட்டமைக்கப்பட்டு வழிநடாத்தப்படுவதற்காக பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'அர்த்த' என்பது 'பொருள்' என்ற அர்த்தத்தில் 'ஒரு தேசத்தில் பொருளாதார வளத்தினை உருவாக்கி அதனை அமைதியான வழியில் அனுபவிப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளின் உள்ளடக்கம்' என்று அர்த்தசாஸ்திரத்தை விளங்கிக்கொள்ள முடியும். ஒரு தேசத்தில் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களது நல்வாழ்விற்கும் சட்ட ஒழுங்கு பின்பற்றப்பட்டு நீதியான ஆட்சி நிலைநிறுத்தப்படுவது அவசியமானதாகையினால் அதற்குரிய வழிமுறைகள் தொடர்பில் மூன்றாவதும் நான்காவதும் பாகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் முறையே இருபது, பதின்மூன்று என்று மொத்தம் முப்பத்து மூன்று அத்தியாயங்கள் உள்ளடங்கியுள்ளன. ஒரு கொள்கையாக அல்லாமல் ஆட்சியாளர்களுக்கான வழிகாட்டல் கையேடாகவே கருதப்படுகின்ற இந்த நூலில் இவ்வாறு நீதியினை நிலைநிறுத்துவதற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ள விடயங்களை மெய்யியல் நோக்கில் நுணுகி ஆராயந்து வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## அர்த்தசாஸ்திரத்தில்சட்ட ஒழுங்கு மற்று நீதிப் பொறிமுறைகள்

ஒரு அரசாங்கத்தின் அடிப்படையான கடமைகளில் ஒன்று தன்னுடைய ஆட்சிப் பிரதேசத்தில் ஒழுங்கினைப் பேணுவதாகும். இதன்பொருட்டு குற்றவியல் செயற்பாடுகளை கண்டறிந்து தண்டித்தல், ஏற்கனவே உள்ள சமூக ஒழுக்கினை பேணுதல் என்ற இரண்டு செயற்பாடுகள் அவசியமாக உள்ளன. குடியியல் சட்டங்கள், குற்றவியல் சட்டங்கள் என்ற இரண்டு பொறிமுறைகளை முறையே 'தர்மத்தை நிலைநிறுத்துபவர்கள்' என்ற தலைப்பிலான மூன்றாவது அத்தியாயம், 'குற்றங்களை களைதல்' என்ற தலைப்பிலான நான்காவது அத்தியாயம் என்பவற்றில்; வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொரு பொறிமுறையிலும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள், முன்வைக்கப்பட வேண்டிய ஆதாரங்கள், விசாரனை முறைகள், வழங்கப்பட வேண்டிய தீர்ப்புக்கள் என்பன விளக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளன. சுவதர்மத்தை பின்பற்றுகின்ற குடிமக்கள் தங்களது வர்ணம், ஆச்சிரமம் ஆகியவற்றில் பின்பற்ற வேண்டிய கடமைகளை முறையே செய்பவர்களாகவும், ராஜதர்மத்தை பின்பற்றுகின்ற ஆட்சியாளன் தன்னுடைய பொறுப்புக்களை முறையே நிறைவேற்றுபவனாகவும் இருக்கும்போது அந்த தேசத்தில் சட்ட ஒழுக்கும்

நீதியும் நிலைநிறுத்தப்பட்டிருக்கும். ஆட்சியாளனுடைய செயற்பாடுகள் மக்களால் முன்மாதிரியாகக் கொள்ளப்படுகின்றன. இதனால் குற்றம் செய்தவர்கள் எதிரிகளாக இருப்பினும், சொந்த மகனாக இருப்பினும் எந்தவிதமான மாறுபாடுகளும் இல்லாமல் பொருத்தமான தண்டனையினை வழங்குவது அவசியமாக உள்ளது. இவ்வாறு நியாயமான முறையில் செயற்படுவதே ஆட்சியாளனுக்குரிய சுயஒழுக்கமுமாகும். இத்தகையவர்கள் பூமி முழுவதையும் வெற்றிகொண்டு ஆளக்கூடிய இயலுமையினைப் பெறுவதுடன் இறப்பின் பின்னர் சொர்க்கத்திலும் இடம் பெறுவார்கள் (3:1.7). இத்தகைய ஆட்சியாளனே இவ்வுலகில் சரியான நடத்தையினை நிலைநிறுத்துவதற்கான பாதுகாவலனாக இருக்கின்ற காரணத்தினால் பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வருகின்ற நியமங்கள் ஏதேனும் காரணத்தினால் பின்பற்றப்படாமல் போகின்ற நிலை உருவாகின்றபோது அவன் தன்னுடைய அரசானையின் ஊடாக எழுத்துமூலமான சட்டங்களை பிரகடனம் செய்து நிலைநிறுத்துவதற்குரிய அதிகாரத்தைக் கொண்டவனாக இருக்கின்றான்.

அரசனின் பிரதிநிதிகளாக கிராமங்களை ஒன்றினைத்து இருக்கின்ற தலைமையிடங்களில் மூன்று அமைச்சர்கள் நீதிபதிகளாக செயற்பட்டு சட்ட ஒழுங்கினை நிலைநிறுத்துவார்கள். இவர்கள் தர்மத்தை அறிந்தவர்கள், நிலைநிறுத்துபவர்கள் என்ற அர்த்தத்தில் 'தர்மாஸ்தா' என்று குறிப்பிடப்படுகின்றார். இது அனைத்துச் சட்டங்களினதும் இறுதியான மூலம் தர்மமே என்பதனை வெளிப்படுத்துகின்றது. இக் காரணத்தினாலேயே உண்மையினை அடிப்படையாகக் கொண்ட தர்மம், சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட ஆதாரம், மக்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வழக்காறுகள், அரசானையின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட சட்டம் என்பவற்றின் துணைகொண்டு நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் எனவும் இவற்றிற்கிடையில் முரண்பாடுகள் இருப்பின் தர்மத்தின் அடிப்படையே இறுதியானதாக கொள்ளப்படும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

## நீதிவான்களின் இலக்கணங்களும்செயற்பாடுகளும்

குடியியல் வழங்குகளை விசாரித்து நீதி வழங்குபவர்களான நீதிபதிகள் தங்களது கடமைகளை வெளிப்படையாகவும், பாரபட்சமின்றியும் மேற்கொள்வதன் ஊடாக மக்களது நம்பிக்கையினை பெற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் பின்வரும் விடயங்களை செய்தலாகாது என்று குறிப்பிடப்படுகின்றது; நீதி கேட்டு வழக்கு தொடுத்தவரை பயமுறுத்துதல், வெளியே தள்ளுதல், நியாயமற்ற வகையில் பேசாமல் இருக்கச் செய்தல், நியாயசபைக்கு வரும் ஒருவரை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்குதல், தேவையானதும் தொடர்புடையதுமான கேள்விகளை கேட்டகத்தவறுதல், தேவையற்றதும் தொடர்பற்றதுமான கேள்விகளை கேட்டல், பொருத்தமான பதில்கள் முன்வைக்கப்படும்போது அவற்றினை கவனத்தில் கொள்ளத் தவறுதல், கேள்விகளுக்கு எவ்வாறு பதில் வழங்க வேண்டும் என்று அறிவுறுத்துதல், குறித்த ஒரு விடயத்தை கூறும்படி ஞாபகமூட்டுதல், தொடர்புடைய ஆதாரங்கள் முன்வைக்கப்படுவதனை தடைசெய்தல், தேவையற்றதும் பொருத்தமற்றதுமான ஆதாரங்களை முன்வைக்க கோருதல், எந்த ஆதாரங்களையும் நோக்காமல் ஒரு பிரச்சினையை முடிப்பதற்கு தீர்மானித்தல், முன்வைக்கப்பட்ட

ஆதாரங்களை சரியான காரணம் இன்றி புறக்கணித்தல், முன்கற்பிதத்தின் அடிப்படையில் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவருதல், தேவையற்ற தாமதங்களை ஏற்படுத்தி ஒருவர் தாமாகவே வழக்கினை வாபஸ்பெறச் செய்தல், முன்வைக்கப்பட்ட கருத்துக்களை தவறாக அர்த்தப்படுத்துதல், சாட்சியங்களை வழிப்படுத்துதல், தீர்ப்புக்கூறப்பட்டுவிட்ட வழக்கினை மீண்டும் விசாரிப்பதற்கு ஆரம்பித்தல். இவை தண்டனைக்குரிய குற்றங்களாக குறிப்பிடப்படுவதுடன் முதல் தடவை செய்தால் பண அபராதமும் இரண்டாவது தடவை செய்தால் இரு மடங்கு அபராதமும் பதவி நீக்கமும் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது (4.9.13-16). நீதிபதியின் எழுதுவினைஞர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன் அனைத்து ஆதாரங்களையும் மிகவும் சரியான வகையில் பதிவு செய்தல் வேண்டும், சாட்சியாக முன்வைக்கப்படாத எதனையும் இணைத்து எழுதுதல் கூடாது, முன்வைக்கபட்ட எந்தவொரு கருத்தினையும் குறைத்து அல்லது தவிர்த்து எழுதுதல் கூடாது, கூறியது ஒன்று இருக்க வேறு பொருள் தரும்படி எழுதுதல் கூடாது, குழப்பமாகவும் இருபொருள் தரக்கூடியதாகவும் விடயங்களை பதிவு செய்தல் தவிர்க்கப்பட வேண்டும், வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றி எழுதுதல் தண்டனைக்குரிய குற்றமாகும் (4.9.17).

இவ்வாறு நியாயம் வழங்கும் நிலையில் செயற்படுபவர்கள் சிறிதும் கபடமற்றவர்களாகவும், அனைவரிடமும் சமமாக நடந்துகொண்டு அனைவருடைய நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரித்தானவர்களாக தங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் (3.20.6) என்று வழிகாட்டப்படுகின்றது.

### குற்றங்களுக்கானதண்டனை விதிப்புக்களும்நிறைவேற்றங்களும்

குற்றங்கள் உறுதிப்படுத்தப்படும்போது என்ன தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டுள்;ளது. நீதிபதியினுடைய செயற்பாடு மன்னனுக்கும் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தமான இடத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட குற்றத்தின் இயல்பு, அதனால் ஏற்பட்ட தாக்கம் தாக்கம், குற்றம் செய்தவருக்கு இருந்த உள்நோக்கம், அவர் எத்தகைய சூழ்நிலையில் குற்றத்தை மேற்கொண்டார் என்ற விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைக்கப்பட்ட உயர்வான அளவில், மத்திய அளவில், குறைவான அளவில் என பொருத்தமான வகையில் தண்டனைக்கான தீர்ப்பினை வழங்குவதாகும். இதன்போது பின்வரும் விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்; பரிந்துரைக்கப்படாதபோது அபராதங்களை விதித்தல், பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட அதிகமாகவோ குறைவாகவோ அபராதம் விதித்தல், பரிந்துரைக்கப்படாதபோது உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல், நியாயமான ஒரு கோரிக்கையினை அனுமதிக்காமலிருத்தலும், நியாயமற்ற ஒன்றினை அனுமதித்தலும் (4.9-10).

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் நடாத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக குறிப்பிடுகின்ற போது அங்கு நித்திரையில்லாமல் செய்தல், உணவு வழங்காமல் விடுதல், அசையாமல் கட்டிப்போடுதல் உள்ளடங்களாக அவர்கள் எந்தவொரு மேலதிகமான துன்பங்களுக்கும் உள்ளாக்கப்படலாகாது என்று குறிப்பிடப்படுவதுடன் கைதியை வெளியே

சென்று வருவதற்கு அனுமதிக்கின்ற, கைதிகளுடன் பாலியல் தொடர்புகளை மேற்கொள்கின்ற அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன (4.11).

குற்றவாளிகளுக்கு அவர்களது குற்றங்களுக்கான தண்டனைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அதேவேளையில் நீதிபதிகள், எழுதுவினைஞர்கள், தண்டனை நிறைவேற்றுபவர்கள் முதலானவர்கள் மேற்கொள்ளக்கூடிய தவறுகள் தொடர்பில் குறிப்பிட்டு அதன்போது விதிக்கப்பட வேண்டிய தண்டனைகள் தொடர்பாகவும் தெளிவான வரையறைகளை ஏற்படுத்தியுள்ளமை சிறப்பான ஒன்றாக உள்ளது.

## குடியியல் வழக்குகளின்போதானநடைமுறைகள்

எத்தகைய வழக்குகள் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட முடியும் என்ற வரையறைகள் முதலாவதாக குறிப்பிடப்படுகின்றன. வீட்டின் உள்ளே, இரவில், காட்டில் என சாட்சி எதுவும் இல்லாது இருவர் மட்டுமே சம்பந்தப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டியவையாக உள்ளன. வழக்குகள் காலம் குறிப்பிடப்பட்டு முறைப்பாட்டாளர், பிரதிவாதி ஆகியோருடைய விபரங்களை உள்ளடக்கி அனைத்து தகவல்களும் பதிவு செய்யப்பட வேண்டும். விசாரணைகளின்போது சாட்சிகளை சமர்ப்பிப்பது சம்பந்தப்பட்டவர்களது பொறுப்பாக உள்ளது. சாட்சிகள் விடயத்தில் வழக்கு தோல்வியடைவதற்குரிய காரணங்களில் பின்வருவன பிரதானமானவையாக அமைகின்றன் சாட்சி முன்னுக்குப் பின் முரணாக பேசுதல், கூறியபடி சாட்சியினை சமர்ப்பிக்காதிருத்தல், பல சாட்சிகள் உள்ளதென அறிக்கையிட்டு பின்னர் சிலவற்றை மட்டுமே சமர்ப்பித்தல், நெருங்கிய உறவினரை சாட்சியாக அழைத்தல், சாட்சியில் ஆள் மாறாட்டம் செய்தல், சாட்சிகளை மாற்றிக் காட்டுதல் (3.1.4). சாட்சிகளைத்தவிர குற்றம் செய்தவன் தானே குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல், வாதி பிரதிவாதிகளை விசாரித்து தெளிவுபெறுதல், சத்தியம் செய்வித்தல் என்பவற்றின் ஊடாகவும் இறுதி முடிவை பெற முடியும் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

யாருக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டதோ அவர் அவ் வழக்கு முடிவடையும் வரையில் புதிய வழக்கினை தொடுக்க முடியாது என்பதுடன் அவருக்கு ஏழு நாட்கள் வரையில் தன்னுடைய நியாயங்களை முன்வைப்பதற்கு அவகாசம் வழங்கப்படும். ஒன்றரை மாதங்களுக்குள் அவர் தன்னுடைய நியாயங்களை முன்வைக்கவில்லை எனில் அவர் தோற்றதாகக் கருதி தீர்ப்பு வழங்கப்படும் என்பதுடன் பொருத்தமானவிடத்து சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும் (3.1.5).

நடுவுநிலைமையாக நின்று நீதி வழங்குவது அவசியமானது என்று குறிப்பிடப்படுகின்ற அதேவேளையில் உதவுவதற்கு யாரும் இல்லாது கோயிலில் தங்கிவாழ்பவர்கள், பிராமணர்கள், துறவிகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளிகள் முதலானவர்கள் நீதிமன்றத்திற்கு வரமுடியாத நிலையில் இருப்பார்களேயானால் அவர்கள் பொருட்டு விசேட கவனம் செலுத்தி வழக்குகளை விசாரித்து நியாயயம் வழங்க வேண்டும் எனவும் துறவிகள், மடங்களின் தலைவர்கள், வெளிநாட்டவர்கள், ஏழைகள், நோயினால் துன்பங்களுக்குள்ளாகியிருப்பவர்கள் விடயத்தில் நீதி

வழங்குபவர்கள் கருணையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றது (3.20.5).

## குடியியல் வழக்குகளின் வகைப்பாடுகள்

மனிதர்களது அனைத்து உலகியல் செயற்பாடுகளும் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கின்றன என்ற அடிப்படையில் அதனை ஆரம்பமாகக் கொண்டே அனைத்து விடயங்களும் ஆராயப்படுகின்றன. மேற்கொள்ளப்படக்கூடிய பல்வேறு திருமண முறைகள், அவற்றின்போது வழங்கப்படுகின்ற தட்சினைகள், பெண்ணுக்கு வழங்கப்படுகின்ற ஸ்திரிதனம், அதனை பயன்படுத்துவதற்கான முறைகள், கணவன் இறந்த பின்னர் தனியாக வாழ்கின்ற பெண்ணுக்குரிய சொத்துரிமை, மறுமணம் செய்கின்ற பெண்ணுக்குரிய சொத்துரிமை, பிள்ளைகளுக்கு சொத்தில் உள்ள உரிமைகள், பிள்ளைகள் பிறக்காத நிலையில் மறுமணம் செய்துகொள்ளுதல், பெண் தன்னுடைய கணவனை பிரிவதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் (3.2.1-6), ஆணுக்கு 16 வயதும் பெண்ணுக்கு 12 வயதும் திருமணத்திற்கு உகந்தது என்று குறிப்பிடப்படுவதுடன் திருமணமானவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள், திருமணத்திற்கு அப்பாலான உறவுகளின்போதான தண்டனைகள், விவாகரத்து பெறும்போது பின்பற்ற வேண்டிய முறைகள், வெளிநாடு சென்ற கணவனுக்காக காத்திருத்தல், பெண்களது மறுமணத்திற்கான வாய்ப்புக்கள் (3.3.1-5, 3.4.1-5) என்பனவும் இவை மீறப்படும்போதான தண்டனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அடுத்ததாக சொத்துரிமையும், சொத்துக்களை பிரித்து வழங்கும்போது பின்பற்ற வேண்டிய நியதிகள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. தந்தையின் சொத்துக்கள் அவரின் இறப்பின் பின்னரே பிள்ளைகளுக்கு உரிமையுடையனவாகின்றன, பிள்ளைகள் இல்லாதவனுடைய சொத்துக்கள் அவனுடன் உடன் வாழ்கின்ற சகோதரிகளுக்கோ, தந்தைக்கோ, சகோதரர்களுக்கோ வழங்கப்பட முடியும். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் வேறு வேறு தகப்பனார்களுக்கு பிறந்தவர்களாயின் அவர்களது தகப்பனாரின் சொத்துக்கள் உரிய முறைப்படி கிடைக்கச் செய்யப்பட வேண்டும் (3.5.1-2). தக்க வயது வந்தவர்களுக்கு மாத்திரமே சொத்து பகிர்ந்து வழங்கப்படும். இளம் பருவத்தினருடைய பங்குகள் தாய்வழி உறவினர் அல்லது கிராம அதிகாரிகளின் பொறுப்பில் வைக்கப்பட்டு பின்னர் வழங்கப்பட வேண்டும். கடன் வசூல் செய்யும் விடயத்தில் தந்தையிடம், அல்லது மூத்த மகனிடம், அல்லது மூத்த பேரனிடமே கேட்க வேண்டும். எக் காரணத்திலும் பெண்களிடமோ இளைய சகோதரர்களிடமோ கேட்டலாகாது. வாரிசுகள் இல்லாதவிடத்து சொத்துக்கள் அரச கருவூலத்தில் சேர்க்கப்படும் (3.5.3-5).

அடுத்ததாக நிலம், வீடு, கால்வாய்கள் அமைத்தல், வாடகைக்கு விடுதல், சொத்துக்களை விற்றல், எல்லைப் பிரச்சினைகள், பொது நிலங்களின் பயன்பாடுகள், ஏரி அமைத்தல், நீர்ப் பயன்பாடு, தெருக்கல் அமைத்தலும் அவற்றின் பராமறிப்பும், விவசாய நிலங்களின் பயன்பாடு விற்றல், குத்தகைக்கு விடுதல், கிராம நிர்வாகம், குற்றம் செய்தவர்களை வெளியேற்றல், மேய்ச்சல் நில நிர்வாகம், பொதுச் சேவைகளில் பங்களிப்பு, காட்டு விலங்குகளை நிர்வகித்தல், வட்டி வீதங்கள், கடன் மீளப்பெறுதல்,

சாட்சிகளது தகுதிகள், தரகுச் செயற்பாடுகள், மனிதர்களை அடகுவைத்தல், அடிமையாக்குதல், அடிமைநீக்கம், ஒப்பந்தம் மேற்கொண்டு செய்யப்படும் வேலைகள், அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கான ஒழுங்குமுறைகள் மூன்றாவது பாகத்தில் உள்ள எட்டு தொடக்கம் பதின்மூன்றாவது அத்தியாயங்களில் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

பதினாறாவது அத்தியாயம் தொலைந்துபோன, களவாடப்பட்ட பொருற்களை மீள பெற்றுக்கொள்வதற்கு உள்ள முறைகள் தொடர்பான விளக்கங்களை வழங்குகின்றது. பதினேழாவது அத்தியாயம் வெள;வேறு பொருற்களை வழிப்பறி செய்பவர்களுக்கு வழங்கப்படுகின்ற தண்டனைகள், அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள், ஊக்குவித்தவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பான விளக்கங்களை வழங்குகின்றது. பதினெட்டாவது அத்தியாயம் பிறர் ஒருவரை திட்டுதல், நிந்தித்தல், பயமுறுத்துதல் என உள ரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்துபவர்களுக்கும், தங்களுடைய சொந்த ஜாதியினை, சமூகத்தினை, உறவுகளை நிந்திப்பவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தண்டனைகள் தொடர்பான விளக்கங்களை வழங்குகின்றது. இருபதாவது அத்தியாயம் சூதாட்ட விடுதிகளை எத்தகைய கட்டுப்பாடுகளுடனும் நியதிகளை பின்பற்றியும் நடாத்த வேண்டும் என்றும் அங்கு ஏற்படக்கூடிய பிணக்குகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான விளக்கங்களையும் முன்வைக்கின்றது.

## சமூக குற்றங்களை களைவதற்கான ஏற்பாடுகள்

நான்காவது பாகத்தின் நான்காவதும் ஐந்தாவதும் அத்தியாயங்களில் தேசத்தில் குற்றவியல் செயற்பாடுகள் இடம்பெறாது இருப்பதற்காக ஒற்றர்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒற்றர்கள் எத்தகைய இயல்புடையவர்களாக, எத்தகைய வேடங்களில் இருக்க வேண்டும் என்பது முதற்கொண்டு நீதிபதிகளாக செயற்படுபவர்கள் கிராம அதிகாரிகள் ஆகியோரது நேர்மைத்தன்மையினை சோதித்தல் மற்றும் பொய் சாட்சி கூறுபவர்கள், மாந்திரீகம் செய்பவர்கள், நஞ்சுப்பொருற்களை உற்பத்தி செய்பவர்கள், போலி நாணயங்கள் தயாரிப்பவர்கள், திருடர்கள் முதலானவர்களை இணங்காண்பதற்குரிய வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன (4.4.1-4, 4.5.1-3). இவை சமூகத்தில் குற்றங்கள் நடைபெறாது தடுப்பதற்காக பின்பற்றப்படுகின்ற முன்கூட்டிய செயற்பாடுகளாக அமைகின்றன.

பொருற்கள் திருட்டுப்போகும்போது அத்தகைய பொருற்களை வாங்கி விற்கின்ற வியாபாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அப் பொருற்கள் தொடர்பில் அறியக் கிடைப்பின் அரசிற்கு தெரிவிக்க வேண்டும் எனவும் இல்லை எனில் அவர்களும் திருட்டுக்கு உடந்தையானவர்களாக கருதி தண்டிக்கப்படுவர் என்பதனை அறிவிக்க வேண்டும். இதனை விடவும் குற்றங்களை தடுப்பதற்காக பொருற்களை கொண்டு செல்தல், விற்றல் செயல்முறைகளில் பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு நியமங்கள், திருடர்களை கண்டுபிடிப்பதற்கான வழிமுறைகள் (4.6.3-4), கொலைக் குற்றங்கள் நடந்திருப்பின் உடலை பரிசோதிக்கின்ற முறைகள், குற்றவாளியினை கண்டறிவதற்கான விசாரனைகள் (4.7.1-4),

குற்றம் சுமத்தப்பட்டவரை விசாரணை செய்து உறுதி செய்து கொள்வதற்காக சாதாரணமாக விசாரித்தல் முதற்கொண்டு பதினெட்டு வகையான துன்புறுத்தல்களை மேற்கொண்டு பின்பற்ற வேண்டிய முறைகள் (4.8) தொடர்பான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சிறு குற்றங்கள் முதற்கொண்டு திருடுதல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் வரையான கூடிய குற்றச் செயல்கள் வரையில் எத்தகைய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற விளக்கங்கள் நான்காவது புத்தகத்தின் ஒன்பதாவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன. இதன்படி சிறிய அபராதம் விதித்தல், நாட்டை விட்டு வெளியேற்றுதல், சித்திரவதை செய்தல், கைவிரல்களை வெட்டுதல், ஒரு கை அல்லது ஒரு காலை துண்டித்தல், மொட்டையடித்தல், சூலத்தில் ஏற்றுதல், அரச அதிகாரிகளாயின் பதவியில் இருந்து நீக்குதல், மரண தண்டனை விதித்தல் என்பன உள்ளடங்குகின்றன. மீண்டும் மீண்டும் குற்றம் செய்பவர்கள், அரசனுடன் தொடர்புடைய விடயங்களில் களவு, குற்றங்கள் செய்பவர்களுக்கு உயர்வான தண்டனையும், பொருத்தமெனில் மரண தண்டனையும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன (4.9.1-4, 4.10.2).

ஐந்தாவது பாகத்தின் முதலாவது அத்தியாயத்தில் அரசனுக்கும், அரசனுடன் தொடர்புடைய விடயங்களிலும் துரோகம் செய்யக்கூடிய அரச அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் எத்தகைய தண்டனைகள் வழங்கப்பட முடியும் என்பது தொடர்பான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எந்தவொரு தண்டனையும் நேரடியாக குறித்த தவறுக்காக நிறைவேற்றப்படுவது என்று அல்லாமல் வேறு காரணங்களை வலிந்து ஏற்படுத்தி அதற்காகவே தண்டனை வழங்கப்பட்டதான தோற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக துரோகம் செய்த ஒரு அதிகாரியின் உறவினர் ஒருவரை அவனுக்கு எதிராக செயற்படச் செய்து இருவருக்கும் இடையில் குரோதத்தை ஏற்படுத்துவதன் ஊடாக குறித்த அதிகாரியை பொருத்தமான வகையில் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கி அவனுக்கான தண்டனையினை நிறைவேற்ற வேண்டும் (5.1.1).

### பெண்களது நலன்களை பேணுவதற்கான ஏற்பாடுகள்

பெண்ணின் உடல் உள குறைகளை மறைத்து திருமணம் செய்வித்தவன் அபராதத்தொகை செலுத்த வேண்டும் என்பதுடன் ஸ்திரிதனத்தையும் திரும்ப கொடுக்க வேண்டும் ஆனால் ஆணின் குறைகளை மறைத்து திருமணம் செய்யும்போது அபராதத்தொகை செலுத்த வேண்டும் என்பதுடன் தான் வழங்கிய ஸ்திரிதனத்தை திரும்பப் பெற முடியாது (3.15.2). சுதந்திரமாக வாழ்கின்ற விதவையினை பலாத்காரம் செய்தவன் தண்டனைக்கு உரியவாகின்றான் (3.20.4). பெண் ஒருத்தி கணவன் வெளிநாடு சென்று திரும்பாதிருத்தல், ராஜதுரோகத்தில் ஈடுபடுதல், தன்னுடைய உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துதல், பெரும் பாவங்களை செய்து பாவியானவன் என்ற நியாயமான காரணங்களையிட்டு விவாகரத்து பெறுவதற்கும், மறு மணம் செய்துகொள்வதற்கும் அனுமதி வழங்கப்படுவதுடன் அதன்போது பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன (3.2.6, 3.4.3).

பெண் வம்சவிருத்தி செய்ய முடியாதவளாக இருப்பின் எட்டு வருடங்களின் பின்னரே ஆண் மறு திருமணம் செய்து கொள்ள முடியும் என்பதுடன்



© 2022, IRJTSR 

அதற்கு முன்னர் செய்வதாயின் அவளிடமிருந்து பெற்ற தட்சிணைகள், ஸ்திரிதனம் என்பவற்றுடன் அதில் அரைப்பகுதியினை மேலதிக நஸ்ட ஈடாகவும் வழங்க வேண்டும் (3.2.4). கணவன் மனையிவினை திட்டுவதற்கும், உடலியல் ரீதியான தண்டனைகளை வழங்குவதற்கும் அனுமதி இல்லை. எனினும் தவிர்க்க முடியாதபோது சிறு கம்பு கொண்டு மூன்று தடவைகள் முதுகில் அடிக்கலாம். வேறு வகையான துன்பங்களுக்கு உள்ளாக்குபவர்கள் கடுமையான தண்டனைக்கும், அபராதத்துக்கும் உரியவர்களாக குறிப்பிடப்படுகின்றனர். அத்துடன் மனைவியை பிடிக்கவில்லை எனில் அவளை புத்த சந்நியாசினியிடமோ, அடைக்கலம் கொடுத்து சொத்தினை காப்பாற்றுபவர்கள் வீட்டிலோ, பிறந்த வீட்டிற்கோ சென்று வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டும் (3.3.2, 3.4.1). தன்னுடைய மனைவியுடன் வாழ்கின்ற காலத்திலேயே பிற பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பவன் தண்டனைக்குரியவனாகின்றான் என்பதுடன் கணவன் மனைவி இருவரும் ஒப்புக்கொண்டால் மாத்திரமே விவாகரத்து பெற முடியும். மனைவியிடம் குற்றம் இருந்து கணவன் விவாகரத்து கோரினால் அவளிடம் இருந்து பெற்ற செல்வங்களை திருப்பியளிக்க வேண்டும் ஆனால் கணவனிடம் குற்றங்கள் இருந்து மனைவி விவாகரத்து கோரினால் அவ்வாறு செய்ய வேண்டியது இல்லை (3.3.3).

கணவன் கடன் பெறுகின்றபோது மனைவி அதற்கு உடன்பாடு தெரிவிக்கவில்லை எனில் அதனை திருப்பிச் செலுத்துகின்ற பொறுப்பினை எந்த சந்தர்ப்பத்திலும் அவள் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை, அதேவேளையில் ஒருவன் தன்னுடைய மனைவியின் வாழ்க்கைக்கான உரிய ஏற்பாடுகளை செய்யாது வெளிநாடு போயிருந்தால் அக் காலத்தில் தன் வாழ்க்கைக்காக அவள் பெறுகின்ற கடன்களை உரிய வகையில் திருப்பிச் செலுத்துகின்ற பொறுப்பு குறித்த கணவனுக்குரியதாகின்றது (3.11.4). கடனை திருப்பிச் செலுத்துவதற்காக யாரேனும் ஒருவர் தன்வீட்டுப் பெண்ணை அடமானம் வைக்கும்போது அவள் நியாயமாக நடாத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. இங்கு அவள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டாலோ, உடல் ரீதியாக பயன்படுத்தப்பட்டாலோ கடன் தீர்ந்ததாகிவிடும் என்ற அடிப்படையில் அடமானத்தில் இருந்து விடுதலை வழங்க வேண்டும் (3.13.2). அடிமையாக இருக்கும் பெண் தன்னுடைய எஜமானன் ஊடாக குழந்தை பெற்றுக்கொண்டால் அவளுக்கு மனைவி என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அங்கு அடிமைகளாக உள்ள அவளது உறவினர்களும் சுதந்திரமாக விடப்பட வேண்டும் (3.13.4).

குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் கர்ப்பிணிப் பெண்களாகவோ, குழந்தை பிறந்து ஒரு மாதம் பூர்த்தியடையாத பெண்களாகவோ இருப்பின் அவர்களை துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி உண்மையினை கண்டறிய முயற்சித்தலாகாது மாறாக விசாரணை முறையே பின்பற்றப்பட வேண்டும் (4.8.3). பெண்களை மானபங்கப்படுத்துதல், பலாத்காரமாக தூக்கிக்கொண்டு போதல், அதற்கான ஆலோசனைகள் வழங்குதல், பலாத்கார முயற்சியில் பெண் இறத்தல், வேண்டுமென்றே கொலை செய்தல் என்பவற்றுக்கு அபராதம் முதற்கொண்டு மரண தண்டனைகள் வரையில் பரிந்துரைப்பு செய்யப்பட்டுள்ளன (4.11.1-3). தாசித் தொழில்

செய்பவளாக இருந்தாளும் அவளது விருப்பம் இன்றி பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டால் அது தண்டனைக்குரிய குற்றமேயாகும் (4.13.7).

## இயற்கையினையும்விலங்குகளையும்பாதுகாப்பதற்கானஏற்பாடுகள்

தடி முதலானவை கொண்டு சிறு விலங்குகளுக்கு துன்பம் ஏற்படுத்துபவர்களுக்கு ஒரு வகையான தண்டனையும், இரத்தம் சிந்தும் அளவிற்கு துன்பம் விளைவித்திருப்பின் அதிகப்படியான தண்டனையும் பரிந்துரைக்கப்படுகின்றது. பயன்தருகின்ற மரங்களின் பூக்கள், பழங்களை சேதப்படுத்துதல், நிழல்தரும் மரங்களை சேதப்படுத்துதல், வெட்டுதல் புண்ணியஸ்தலங்களிலும், சுடுகாடுகளிலும் இருக்கும் புதர்கள், கொடிகளை சேதப்படுத்துதல் என்பனவற்றுக்கும் ஒவ்வொரு அளவான தண்டனைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக எல்லைகளில் நடப்பட்ட மரங்கள் புனித ஸ்தலங்களில் உள்ள மரங்கள், வளர்ந்த பெரிய மரங்களை வெட்டி சேதப்படுத்தும் குற்றங்களை செய்பவர்களுக்கு இரு மடங்கு தண்டனை வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளுத (3.19.3-4). கன்றுகளை ஈனச்செய்யும் தகுதியுடையதாக உள்ள சிறு விலங்குகளின் ஆண்மைத்தன்மையினை இல்லாமல் செய்வது தண்டனைக்குறியதாகின்றது (3.20.4). பசுக்களின் மேய்ச்சல் நிலத்தில் வேறு கால்நடைகளை மேய்ப்பது அபராதம் விதிப்பதற்குரிய குற்றமாகும் எனினும் கோயில் மாடு, கன்றுகளை உருவாக்கக்கூடிய காளைகள் மேய்வது அனுமதிக்கப்படுகின்றது (3.10.5). சரணாலயங்களில் உள்ள காட்டு விலங்குகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து கேடு விளைவித்தமைக்காக அவை துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படலாகாது மாறாக வெளியேற்றிவிட்டு உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி மீண்டும் நடவாதவாறு ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும் (3.10.6).

நாட்டின் வளத்தை பெருக்குவதற்காக இயற்கையினை வரையறைக்கு உற்பட்டு நுகர்வு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. தரிசு நிலத்தை விளைச்சல் நிலமாக்குதல், அணைகள் கட்டுதல், ஏரிகள் உருவாக்குதல் என்பவற்றிற்கு தனிநபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அம் முயற்சிகளை வெற்றிகரமாக செய்பவர்களுக்கு வரிவிலக்குகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஏரிகள், அணைகள் புதிதாக கட்டியவர்களுக்கு ஐந்து வருடங்கள், பழையவற்றை புனரமைப்பவர்களுக்கு நான்கு வருடங்கள், ஏரிகளை விஸ்தரிப்பவர்களுக்கு இரண்டு வருடங்கள் என வரி விலக்கீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் பிறருக்கு சொந்தமான இடங்களில் இவற்றினை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் (3.9.5, 3.10.1)

குற்றச் செயல்களின் உள்ளே இயற்கையில் பாதுகாக்கப்பட்ட சந்தனமரம் போன்ற உயர்ரக மரங்களை வெட்டுதல், மான்கள் போன்ற விலங்குகளை வேட்டையாடுதல் என்பன உள்ளடக்கப்பட்டு அதற்கான தண்டனைகள் பரிந்துரைப்பு செய்யப்பட்டுள்ளன (4.10.1). நீர் தேங்கியிருக்கம் அணைக்கட்டை உடைத்தவர்கள் அங்கேயே தண்ணீரில் மூழ்கடித்துக் கொல்லப்படவும், தண்ணீர் இல்லாத அணையை உடைத்தவர்களுக்கு வெள்ளிக்காசுகள் அபராதமும், உபயோகமின்றி சிதிலமான அணையை உடைத்தவர்களுக்கு சாதாரண அபராதமும் விதிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது (4.11.3). உரோமத்திற்காகவும், பால் பெற்றுக்கொள்ளவும், வாகனமாக பயன்படுத்தவும், இனப்

பெருக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுகின்ற விலங்குகளை அபகரித்தலும், தெய்வ மற்றும் இறந்தவர் நிமித்தமான காரணங்களைத்தவிர வேறு தேவைகளுக்காக அவற்றை கொலை செய்தலும் தண்டனைக்குரிய குற்றங்களாகும் (4.13.5).

## அர்த்தசாஸ்திர நீதியின் நடுவுநிலைமை

ஒருவருடைய கல்வி, புத்தி, வீரம், உயர்குலம், செய்யும் தொழில் என்பவற்றின் அடிப்படையில் அவரை கௌரவிக்க வேண்டும் (3.20.5), நாட்டிற்கு நலன் தேடுபவர்களுக்கும், அணைகள் முதலானவற்றை ஏற்படுத்துபவர்களுக்கும், கிராம நலன் பேணுபவர்களுக்கும் மன்னன் எப்போதும் அவர்களுக்கு பிரியமானவனாகவும் இதமாகவும் நடந்துகொள்ள வேண்டும் (3.10.8) என்று குறிப்பிடப்படுவதானது தகுதியின் அடிப்படையிலான நீதி (துரளவiஉந ழn வாந டியளளை ழக அநசவை) என்ற அணுகுமுறையினை வெளிப்படுத்துவதாக உள்ளது.

வர்ணாச்சிரம தர்மத்தினை உயர்ந்த அளவில் பேணுவதற்கு வற்புறுத்துகின்ற அர்த்தசாஸ்திரம் பிராமணர்களுக்கு உயர்வான அந்தஸ்தினை வழங்கியிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டுக்களாக பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும். அந்தணன் ஒருவன் சூத்திரனால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டால் அவன் எந்த அவயவத்தை பயன்படுத்தினானோ அதனை வெட்டிவிடுதல் வேண்டும் (3.19.1), கற்றறிந்த பிராமணர்கள், துறவுவாழ்க்கையில் இருக்கின்ற பிராமணர்கள் ஆகியோர் குற்றவாளிகளாக இருப்பார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டால் ஒற்றர்களை பயன்படுத்தி நுட்பமான செயற்பாடுகளின் ஊடாகவே உண்மையினை கண்டறிய வேண்டும் மாறாக அவர்களை கைது செய்வதோ துன்புறுத்தலுக்கு உள்ளாக்கவோ கூடாது. இதனை மீறி செயற்படுகின்ற காவலர்களும் நீதிபதிகளும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் (4.8.3), எத்தகைய குற்றங்கள் செய்திருப்பினும் பிராமணர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படலாகாது மாறாக நெற்றியில் முத்திரை பதிப்பித்து நாட்டை விட்டு வெளியேற்றுதல், அல்லது சுரங்கங்களில் வேலை செய்வதற்கு அனுப்புதல்; வேண்டும் (4.8.5-6).

தேவ, பித்ரு காரியங்களின்போது வைதீகர்கள் அல்லாத பௌத்த, ஜைன சந்நியாசிகளுக்கு உணவு வழங்குபவர்களுக்கு 100 வெள்ளிக்காசுகள் அபராதம் விதிக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது (3.20.4). மன்னனிடமிருந்து ராஜ்ஜியத்தை அபகரிக்க வேண்டும் என்று சூழ்ச்சிகள் செய்தாலோ, அந்தப்புரத்திற்குள் அத்துமீறி நுழைந்தாலோ அவர்களது தலையில் தீயிட்டு கொலை செய்யப்பட வேண்டும் ஆனால் அது ஒரு அந்தணனால் செய்யப்பட்டிருப்பின் அவனை பாதாள இருட்டுச் சிறையில் அடைக்க வேண்டும் (4.11.2). அநாதையாக இருக்கும் பிராமணப் பெண்ணை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்குபவர்கள் சத்திரியர்களாக இருந்தால் வெள்ளிக்காசுகள் அபராதம், வைசியர்களாக இருந்தால் அனைத்து சொத்துக்களும் பறிமுதல், சூத்திரர்களாக இருந்தால் தீயிலிட்டு எரித்தல் (4.13.7) என்ற தண்டனைகள் குறிப்பிடப்படுகின்றன.

மன்னன் நீதி தவறாது ஆட்சி செய்வதில் குற்றவாளிகளை சரியாக அடையாளப்படுத்தி தண்டனை வழங்குவது முதன்மையானதாக அமைகின்றது. இந்நிலையில் குற்றமற்றவர்கள் அவனால் தண்டனைக்கு

உள்ளாக்கப்பட்டால் விதித்த அபராதத்தில் முப்பது மடங்கை வர்ணபகவானுக்கு காணிக்கையாக்க வேண்டும். அதாவது அபராதத்தினை நீரில் இட்டு பின்னர் பிராமணர்களுக்கு தானமாக வழங்க வேண்டும். இவ்வாறு செய்வதன் ஊடாக மன்னனுக்கு ஏற்பட்ட பாவம் நீங்கும் (4.13.8) என்று குறிப்பிடப்படுகின்றது.

## முடிவுரை

தேசத்தில் சட்ட ஒழுங்கினை பேணி நீதியினை நிலை நிறுத்துவதன் ஊடாகவே மக்களது நல்வாழ்க்கை உறுதி செய்யப்பட முடியும் என்ற விடயத்தில் கௌடில்யர் உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்துகின்றார். அதற்காக மக்களை பயமுறுத்தி எப்போதும் பீதியிலேயே வைத்திருந்து ஒழுங்கினை ஏற்படுத்துவதனை அவர் ஆதரிக்கவில்லை. தண்டனை என்பது அவசியமானது ஆனால் நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதே இவருடைய நிலைப்பாடு. இதன் காரணத்தினாலேயே கடுமையான தண்டனைகளை வழங்கும் ஆட்சியாளன் பயத்துடன் கூடிய துவேசத்தை மக்களிடையே ஏற்படுத்துபவனாகவும், மென்மையான தண்டனைகள் வழங்குபவன் மக்களினால் மதிக்கப்படாதவனாகவும் ஆகின்றான் என்று குறிப்பிட்டு தேவையான அளவிற்கு தண்டனை வழங்குகின்ற ஆட்சியாளன் மக்களினால் போற்றப்படுகின்றான் என்று குறிப்பிடுகின்றார். இது வழங்கப்படும் தண்டனை நியாயமானது என்பதனை மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவில் மன்னன் செயற்படுவது அவசியமானது என்பதனை உணர்த்துகின்றது. இதற்கு முதன்மையானதாக அமைவது ஆட்சியாளன் தன்னளவில் நேர்மையான வழியில் நடப்பவனாக இருப்பதாகும். அடுத்ததாக அவ் ஆட்சியாளன் தன் சார்பில் நீதி வழங்குகின்ற அதிகாரிகள் உண்மையிலேயே நியாயமானவர்களாக நடந்துகொள்வதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும், மீறுகின்றபோது வழங்கப்படக்கூடிய தண்டனைகள் தொடர்பாகவும் தெளிவாக இருக்க வேண்டியுள்ளது. இதன் பின்னர் அந்த அதிகாரிகள் கிராம, நகர வாசிகளை பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றி சரியான நல்வழியில் நடக்கச் செய்வதற்கான வழிமுறைகள் கூறப்படுகின்றன. நீதிபதிகள் எப்போதும் ஆட்சியாளனுக்கும் மக்களுக்கும் இடையில் செயற்பட்டு நாட்டினை நல்ல வகையில் இயக்குவதற்காக குற்றத்தின் தன்மை, செய்யப்பட்ட பின்னனி, அதனால் ஏற்படக்கூடிய உடனடி மற்றும் நீண்டகால விளைவுகள் என்ற விடயங்களை கவனத்தில் கொண்டு தண்டனையினை வழங்க வேண்டும்.

தண்டனை வழங்கப்படுவது என்பது உலக நன்மைக்காகவே. மாறாக எந்தவொரு தனிப்பட்ட நலனையும் பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது பலி தீர்த்துக்கொள்வதற்காகவோ அல்ல என்பது முதன்மையானதாக அமைகின்றது. இந்த உலக நன்மை என்பது இதற்கு முன்னர் பின்பற்றப்பட்டு வந்த வர்ணாச்சிரம தர்மத்தை பேணுவதேயாகும் என்பது கௌடில்யரின் நிலைப்பாடாக உள்ளது. இத் தர்மமானது ஒரு வர்ணத்தை சேர்ந்தவர்கள் இன்னுமொரு வர்ணத்தை சேர்ந்தவர்களை அடக்கி ஆள்வதற்காகவும், சுரண்டலுக்கு உள்ளாக்கி நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காகவும் அல்ல மாறாக அவரவர் இயல்புக்கும், தகுதிக்கும் உகந்த தொழில்களை மேற்கொண்டு பிறருடைய காரியங்களில் தலையீடு செய்யாமல் சமூக ஒழுங்கினை பேணிப்



© 2022, IRJTSR 

பாதுகாப்பதாகும். இவ்வாறு இயங்குவதே நியாயமான சமூகமாக குறிப்பிடப்படுகின்றது. இத்தகையதான சமூக ஒழுங்கு தண்டனைகளின் ஊடாக ஏற்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில்; 'மச்சநீதி' எனப்படும் பெரிய மீன்கள் சிறிய மீன்களை உண்டு வாழ்கின்ற நிலையே ஏற்படும் என்கின்றார். அதாவது வலிமை படைத்தவர்கள் பலவீனமான நிலையில் உள்ளவர்களை தங்களது நன்மைக்காக பயன்படுத்திக்கொள்வார்கள். ஆனால் நியாயமான ஒரு ஆட்சியாளன் அதற்கு இடம் வழங்காது சமூகத்தில் உள்ள அனைத்து மக்களும் நல்வாழ்க்கை வாழ்வதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்வதற்கே தண்டனை இன்றியமையாததாகின்றது.

தண்டனை வழங்கும் செயன்முறையில் குற்றத்தை நன்கு ஆராய்தல், சாட்சியங்களை முன்வைத்தல், குற்றம் நிகழ்ந்தமையினை உறுதிப்படுத்துதல், பொருத்தமான தண்டனையினை பாரபட்சமின்றி வழங்குதல் என்பன முக்கியமானவையாக இருக்கின்றன. இவற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறைபாடு நிகழாத வகையில் செயற்படுவது உரிய அதிகாரிகளின் பொறுப்பாக அமைகின்றது. இதன்பொருட்டே தவறாக நடந்துகொள்ளும் அதிகாரிகளை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளும், அவர்கள் குற்றம் செய்கின்றபோது வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் தொடர்பாகவும் உள்ள வெளிப்படுத்தல்கள் அமைந்துள்ளன. இங்கு சிறப்பம்சமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகள், அவை நிகழும்போது குற்றவாளியினை கண்டுபிடிப்பதற்கான வழிமுறைகள், அவர்களுக்கான தண்டனைகள் விளக்கப்பட்டுள்ள அதே சந்தர்ப்பத்தில் குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை எனில் இழக்கப்பட்ட பொருளுக்கு சமமான இழப்பீட்டினை அரச கருவூலத்தில் இருந்தோ, கிராம அதிகாரிகளிடமிருந்தோ, வனத்துறைக் காவலர்களிடம் இருந்தோ அறவீடு செய்து உரியவருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு உள்ளமையாகும். இது எந்த வகையிலும் ஒருவர் பாதிப்பிற்கு உள்ளாகிவிடக்கூடாது என்பதனை உறுதி செய்வதற்காக கொடில்யர் முன்வைத்துள்ள ஏற்பாடாக நோக்கப்படக்கூடியதாக உள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது சர்வ வல்லமையுடன் கூடிய ஏகாதிபத்திய சாம்ராஜ்ஜியம் ஒன்றினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டு செயற்பட்ட கௌடில்யருடைய சிந்தனையும் செயற்பாடும் மிகவும் துல்லியத்தன்மையினைக் கொண்டதாக உள்ளமையினை அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. ராஜ்ஜிய நிர்வாகத்தின் சட்ட ஒழுக்கினை பாதுகாத்து நீதியான ஆட்சியினை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு மிகச்சிறிய விடயங்களுக்கும் கவனம் செலுத்தி அவை கையாளப்பட வேண்டிய முறைகள், கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். குறித்த விடயங்களில் கௌடில்யருக்கு இருந்த அனுபவ அறிவு மிகப்பெரும் துணையாக இருந்தமையே அவர் இந்த நூலினை ஒரு கொள்கையாக அல்லாமல் ஆட்சியாளர்களுக்குரிய வழிகாட்டல் கையேடு என்ற தரத்தில் உருவாக்குவதற்கு காரணமாக அமைந்துள்ளது. சமகால சட்ட ஒழுங்கு நடைமுறைகள், நீதிச் செயற்பாடுகள் என்பவற்றின்போது பின்பற்றப்படுகின்ற பல்வேறு நெறிமுறைகள் கௌடில்யர் வகுத்துள்ள விடயங்களுடன் இசைவானதாக இருப்பதானது புராதன இந்திய

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

சமூகத்தில் மக்கள் எவ்வாறான ஒரு ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சி செய்யப்பட்டுள்ளனர் என்பதனை அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. இவற்றில் பெண்களது நலன்கள், இயற்கைப் பாதுகாப்பு என்பவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் மிகவும் மெச்சத்தக்கவையாகும். வர்ணாச்சிரம தர்மத்தை பேணுவதே சமூக நலனை பேணுவதற்கான வழிமுறையாக கௌடியரும் வழிமொழிந்து ஏற்றுக்கொண்டுள்ளார். இதில் விமர்சனத்திற்குரிய ஒரு விடயமாக இருப்பது ஒப்பீட்டு ரீதியாக பிராமணர்களுக்கு உடலியல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதில் இருந்து விலக்களிக்கப்படுதல், ஆட்சியாளன் தவறுசெய்கின்றபோது அதன் மேற்கொள்கின்ற பிராயச்சித்தங்களின் பலன்கள் அந்தணர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் என்பனவாகும்;. இவ் விடயங்கள் இரண்டும் மனிதர்களுக்கிடையிலான அசமத்துவமின்மை என்பதனை நிரந்தரமான ஒன்றாக காட்டுகின்றது. இவற்றினை தவிர்த்துவிட்டால் அர்த்தசாஸ்திரம் என்பது இந்திய நீதிப் பாரம்பரியத்தின் உயர்வினை தாங்கி நிற்கின்ற ஒரு பொக்கிசமாகவே உள்ளது.

## சான்றாதாரங்கள்


[1] ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா. (2016). அர்த்த சாஸ்திரம் என்னும் சாணக்கியரின் நீதிநூல் (9ம் பதிப்பு). இந்தியா: ஸ்ரீ இந்து பப்ளிகேசன்ஸ்

[2] முகுந்தன். ச. (2014). இந்து இலக்கியங்களில் பொருளியல் அரசியல் நீதிபரிபாலனம். இலங்கை: பூபாலசிங்கம் பதிப்பகம்

[3] Shamasastry. R. (1905). *Koutilya's Arthashastra.* Online version - http://www.zoroastrian.org.uk/scripture/indian/arthashastra/index.html

[4] Rangarajan, L.N. (1992). *Koutilya – The Arthashastra.* USA: Penguin Books

[5] Trautmann, T.R. (2016). *Arthashastra – The Science of Wealth.* USA: Penguin Books

[6] Gautam, P.K. *Understanding Dharma and Atha in Statecraft through Kautilya's Arthashastra.* India: Institute for Defence Studies and Analysis